நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



நன்மை பெருகப் பாடுபடும் நகரத் தார்கள் குரலுக்கு
முன்னின் றருளும் கொல்லூரின் மூகாம் பிகையே காப்பாமே

செப்டம்பர் 1982

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

குரல் 1
ஒலி 8

துந்துபி
ஆவணி

செப்டம்பர்
1982

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் லேந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்(டு) அயோத்தி வந்தான்
— கம்பன்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.

தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

தனி இதழ் ரூ. 1-00
ஆண்டுச் சந்தா ரூ. 12-00



மூகாம் பிகையை வாழ்த்திடுவோம்

சொ. சொ. மீ. சுந்தரம் எம் காம்.,

தன்னை உணரச் செய்திடுவாள்
  தவமும் தானே ஆகிடுவாள்
மன்னர் போற்றும் பெருவாழ்வும்
  வரமும் திறலும் தந்திடுவாள்
அன்னை என்றே நாடியவர்
  அன்பில் கட்டுப் பட்டதனல்
முன்னை வினைகள் மாற்றிவிடும்
  மூகாம் பிகையைப் போற்றிடுவாம்.

காசிப் பதியில் விசாலாட்சி
  காஞ்சிக் கினிய காமாட்சி
தேசம் போற்றும் மதுரையிலே
  திகழும் தமிழ்சேர் மீனுட்சி
பாசத் தோடும் நமையாளப்
  பாரில் ஒன்ருய்ச் சேர்ந்தமையால்
ஆசை பொங்கச் சிவம்காணும்
  அன்னை மூகாம் பிகையானூர்.

தமிழர் நாட்டு நிலமெல்லாம்
  தழைக்கத் தோன்றும் காவிரிபோல்
அமுதம் நெஞ்சில் ஊறிடவே
  அன்னை மூகாம் பிகையானூர்
இமைகள் கண்ணைக் காப்பதுபோல்
  என்றும் காக்கும் அருளுடையாள்
நமசி வாயப் பொருளானுள்
  நளின மலர்த்தாள் வாழியவே!

91/1

நகரத்தார் குரல்

கம்பனின் கண்ணீர்

இளமைப் பருவத்தில் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட தேச பக்தர்; கம்பனுக்கு வாய்த்த கலிகாலச் சடையப்பர் நம்மைவிட்டு மறைந்து விட்டார்.

சிறந்த அறிஞர்; சீரிய தொண்டர்; அன்பினர்; அஞ்சா நெஞ்சினர்; அரசியல் வித்தகர்; ஆராய்ச்சியாளர்; தன்னலம் கருதாதவர்; தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடு பட்டவர்; உயிரைச் சட்டை செய்யாதவர்; சட்டையணியாத சமுதாயத் தொண்டர் நம்மை விட்டு மறைந்து விட்டார்.

தெய்வ பக்தர்; தேச பக்தர்; காட்சிக்கு எளியவர்; கடுஞ்சொல் பேசாதவர்; கற்பனைகளில் மிதக்காதவர்; சிற்பக் கலை வல்லுநர்; சிறந்த அரசியல்வாதி; கன்னித் தமிழை வளர்க்கக் காலமெல்லாம் பாடுபட்டவர்; கம்பன் புகழ் பாடியவர்; கம்பன் மணிமண்டபம் கண்டவர்; தேரெழுந்தூரில் பிறந்த கம்பனுக்குத் தேசமெல்லாம் திருநாள் கொண்டாடியவர். அந்தக் கம்பனைக் காணப் போய் விட்டார்.

காரைக்குடி தந்த கம்பனடிப்பொடியின் மறைவு நமக்கு மட்டும் இழப்பல்ல; நாட்டிற்கும் அரசியலுக்கும் கன்னித் தமிழுக்கும் சிற்பக் கலைக்கும் பேரிழப்பாகும். உடம்பெல்லாம் வாயாக அழுதபோதும் அவரை இழந்த துயரம் தீராது.

சடையப்ப வள்ளல் இறந்த போதுகூடக் கலங்காத கவிச் சக்கரவர்த்தி கம்பன் கம்பனடிப்பொடி மறைந்த போது கண்ணீர் விட்டிருப்பான். அவர் கூறியபடி கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழை வளர்ப்போம்.

அரை நூற்றுண்டாக கம்பன் புகழ் பாடி, கன்னித் தமிழை வளர்க்க அருந்தொண்டாற்றி அண்மையில் அமரத்துவம் பெற்றுவிட்ட 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்கள் பற்றி, அவர்கள் பிறந்து, வளர்ந்து, புகழ் பெற்ற காரைக்குடி நகரில் சேகரித்த தகவல்களை இங்கு வெளியிடுவதன் மூலம் அவ்வறிஞருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

'கம்பன் அடிப்பொடி' அவர்களின் மைத்துனர் (மனைவியின் தம்பி) இராம. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நமது பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது :

'கம்பன் அடிப் பொடி' அவர்கள் தொடக்க காலத்தில் பர்மாவில் படித்தார்கள். பர்மாவிலிருந்து வந்த பின்பு 1942ல் காங்கிரஸ் நடத்திய தனி நபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு காரைக் குடியிலிருந்து சென்னைக்கு நடந்து சென்றார்கள்.

பிரிட்டிஷ் கலவரத்தின்போது 'கம்பன் அடிப்பொடி' அவர்களை எங்கு கண்டாலும் சுடச் சொல்லி உத்தரவு பிறக்கப்பட்டது. அதனால் அவர்கள் தலைமறைவாக இருந்தார்கள். எனவே பிரிட்டிஷ் அரசு ஜப்தி உத்தரவு பிறப்பித்து அவர்களது வீட்டிலிருந்த 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஜப்தி உத்தரவைப் பற்றி முன்னமேயே அறிந்துகொண்ட அவர்கள் தன் வீட்டில் இருந்த நூல் நிலையத்தை மட்டுமாவது காப்பாற்றும்படி ரகசிய உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி 5000 புத்தகங்கள் கொண்ட அந்த நூல் நிலையத்தை அவர்களது உறவினர்களும் நண்பர்களும் சாமர்த்தியமாக வெளியேற்றிக் காப்பாற்றிக் கொடுத்தார்கள். எம். என். எஸ்டி. சிதம்பரம் செட்டியார் போன்ற அவர்களது நண்பர்களை பிரிட்டிஷ் அரசு கொடுமைப்படுத்தியதைக் கேள்விப்பட்டு கம்பன் அடிப்பொடி அவர்கள் சென்னையில் சரணடைந்தார்கள். அதனைத் தொடர்ந்து அவர்கள் அலிபுரம் (உத்தரப் பிரதேசம்) சிறையில் இரண்டாண்டுகள் இருந்தார்கள்.

1942ல் காரைக்குடியில் நடைபெற்ற சூதாட்ட மறியல், கள்ளுக் கடை மறியல் ஆகியவற்றை 'கம்பன் அடிப்பொடி' அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள்.

கண்ணகி சிலை

காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்துள்ள கண்ணகியின் சிலைக்கு வடிவமைப்பும் ஸ்லோகமும் தயாரித்துக் கொடுத்தவர்கள் 'கம்பன் அடிப் பொடி' ஆவார்கள். கம்பன் படத்தை ஓவிய உருவில் கொண்டு வந்த பெருமைக்குரியவர்களும் அவர்கள் தான் !

1946ல் தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் பதவிக்கு அவர்கள் காமராஜரை எதிர்த்துப் போட்டியிட்டார்கள். ஆனால் 1 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றார்கள். காரணம் அவர்கள் யாரையும் நேரில் சந்தித்து தனக்கு வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்ளவில்லை. 'என் தகுதி, திறமை, நேர்மையை உணர்ந்து வாக்களிப்பவர்கள் வாக்களியுங்கள்' என்று அறிவிப்பு மட்டுமே செய்திருந்தார்கள். கம்பன் அடிப்பொடி அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் அவர்களது அரசியல் வாழ்வே மாறியிருக்கும்.

காங்கிரஸ் கட்சியின் போக்குப் பிடிக்காமல் அவர்கள் சில ஆண்டுகள் அரசியலில் ஈடுபாடு கொள்ளாதிருந்தார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு காரைக்குடித் தொகுதி சட்ட மன்றத் தேர்தலில் ராஜாசர் முத்தையா செட்டியாரவர்களை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டு சுமார் ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார்கள். அது தொடர்பாக வழக்கு நடந்தது. கீழ் நீதி மன்றத்தில் கம்பன் அடிப்பொடி வென்றார்கள். சென்னை உயர் நீதி மன்றத்தில் ராஜாசர் வென்றார்கள்.

ராஜாஜியின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட சா. க. அவர்கள் அவர்களது கட்டாயத்தின் பேரில் சுதந்திராக் கட்சியில் சேர்ந்தார்கள். சுதந்திரா சார்பில் ஒரு முறை சட்ட மன்றத் தேர்தலில் சுப்பையா அம்பலம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு வென்று சட்ட மன்ற உறுப்பினரானார்கள். தி.மு.க. ஆட்சியின்போது எம். எல். சி. ஆகவும் இருந்திருக்கிறார்கள்.

— இவ்வாறு மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறினார்கள்.

——

'கம்பன் அடிப்பொடி' அவர்களது மாப்பிள்ளை (மகளின் கணவர்) பழ. சண்முகம் அவர்களும் சண்முகம் அவர்களது புதல்வர் ச. கம்பராமன் அவர்களும் பேட்டியின் போது கூறியதாவது :-

கம்பன் அடிப்பொடி அவர்கள் தொடக்கத்தில் பர்மாவில் தோங்குவா என்ற இடத்தில் வசித்தார்கள். ராய. சொ., சொ. முருகப்பா சா. க. ஆகிய மூவரும் சிதம்பர ஐயரிடம் தமிழ்க் கற்றவர்கள். சா. க. அவர்கள் அடிக்கடி புத்தகங்கள் வாங்கியதை அவர்களது தந்தை கடிந்து கொண்டதுண்டு. கம்ப இராமாயணத்தில் சா. க. அவர்கள் அதிக ஈடுபாடு கொள்ளக் காரணமானவர்கள் பி ஸ்ரீ ஆச்சாரியாரும் டி. கே. சிதம்பரநாத முதலியாருமே.

> காந்தியடிகளுக்குப் பிர்லா அமைந்தது போல் கம்பன் அடிப்பொடிக்கு ஜி. கே. சுந்தரம் அவர்கள் அமைந்தார்கள்.
>
> —கா. கு. கோ தண்டராமன்
>
> (கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் காரைக்குடியில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில்)

செட்டி நாட்டுப் பகுதியில் காங்கிரஸ் இயக்கம் வளர்ந்ததற்குக் காரணகர்த்தா பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை ஆவார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் செட்டி நாட்டில் தீவிரமடைய மூல காரண கர்த்தர் சா. க. அவர்களே !

பிரிட்டிஷ் அரசு வழங்கிய ராவ் பகதூர், திவான் பகதூர், சர் பட்டங்களைப் பெற்றவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று அரசியல் மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் சா. க. அவர்கள்.

'கானாடுகாத்தானில் காங்கிரஸ் கூட்டம் போட்டால் சுட்டு விடுவோம்' என்று அச்சுறுத்தியதைச் சவாலாக ஏற்று ஆவேசமாகத் தம் சட்டையைக் கழற்றிய சா. க. அவர்கள் அன்றிலிருந்து சட்டையே அணிவதில்லை.

1947ல் நகரத்தார் மலேயாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தால் ஒரு வருமானத்திற்கு மலேயாவிலும் இந்தியாவிலுமாக இரண்டுமுறை வருமான வரி வாங்கும் வழக்கம் இருந்து வந்தது. ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது சா. க. அவர்கள் தலைமையில் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் மற்றும் சிலர் டில்லி சென்று அந்த Double Tax முறையை எதிர்த்து வழக்குப் போட்டு அதில் வெற்றியும் கண்டார்கள். அந்த வழக்கை நடத்திய புலவாய் தேசாய் என்ற வழக்கறிஞர் அதற்குப் 'பீஸ்' கூட வாங்கிக் கொள்ளவில்லை.

அதன் பின்பு 1947ல் சா. க. அவர்கள் தலைமையில் திரு. எம். எஸ். எம். எம். மெய்யப்ப செட்டியார் திரு. கே. வி. ஏஎல். எம். இராமநாதன் செட்டியார், திரு. பி. வி. ஆர். எம். குழந்தையன் செட்டியார் திரு. எஸ். எல். என். சாத்தப்ப செட்டியார், திரு. ஆர். எம். எஸ். இராமசாமிச் செட்டியார், பி. கே. என். குமரப்ப செட்டியார் என்ற சக்தி செட்டியார் ஆகியோர் இந்தியாவிற்கும் மலேயாவுக்கும் சுமுக உறவு ஏற்பட நல்லெண்ணத் தூதுக் குழுவாக மலேயா சென்று வந்தார்கள்.

கம்ப இராமாயணத்தில் சா. க. அவர்களுக்குத் தெரியாத எந்த விஷயமும் இல்லை. கல் வெட்டு ஆராய்ச்சிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும் அவர்கள் நிபுணத்துவம் பெற்றவர்கள். இலக்கிய மேடையை 'பட்டி மண்டபம்' ஆக்கிய பெருமை அவர்களையே சாரும். 1972ல் மேல் முறையீட்டுப் பட்டி மண்டபம் என்ற புதிய பாணியை ஏற்படுத்தியவர்களும் அவர்களே. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி மொழிகளில் அவர்களுக்கு நல்ல பரிச்சயம் உண்டு. தெலுங்கு, மலையாள மொழிகள் ஓரளவு தெரியும். நூல்களை அதிகம் விரும்பிப் படிப்பார்கள். சுய சரிதை எழுதுவதை அவர்கள் விரும்பவில்லை.

சட்டை அணியாத நால்வர் !

காந்தியடிகளைப் பின்பற்றி சட்டை போடாமல் (பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தில்) இருந்த நால்வரில் கம்பன் அடிப்பொடி ஒருவர். மற்ற மூவர்: புலுசு சாம்பமூர்த்தி, சர்தார் வேதரத்தினம் என். எஸ். வரதாச்சாரி.

— எம். எம். இஸ்மாயில்
(முன்னாள் தலைமை நீதிபதி)

சா. க. அவர்கள் 'பிள்ளையார் பட்டி தல வரலாறு' 'ராஜராஜன்' (கல் வெட்டு ஆராய்ச்சி) தமிழ்த் திருமண முறை பற்றி 'தமிழ்த் திருமணம்' ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார்கள். தமிழக அரசின் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள 'சிற்பச் செந்நூல்' என்ற புத்தகம் வெளிவரத் துணை நின்று மேற்பார்வை செய்துள்ளார்கள். தமிழக நாகரிகத்தைப் பறை சாற்றும் 'கையேடு' என்ற நூலை இயற்றியிருக்கிறார்கள்.

சா. க. அவர்கள் நம் நாடு சுதந்திரம் பெற்றபோது கோடி கட்டினார்கள். அதன் பிறகு கோடியே கட்டவில்லை. தீபாவளிக்குக் கோடி கட்டுவதை விரும்புவதில்லை. பொங்கல் திருநாளை மட்டும் கொண்டாடுவார்கள். மற்ற இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடுவதில்லை. கோவில்களில் நடைபெறும் திருப்பள்ளி எழுச்சிக்குப் போய் வருவார்கள். பூஜைகளில், படைப்புகளில் நம்பிக்கை உள்ளவர்கள்.

— இவ்வாறு பழ. சண்முகம் அவர்களும் கம்பராமன் அவர்களும் கூறினார்கள்.

——

காரைக்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சித. சிதம்பரம் அவர்கள் பேட்டியின்போது கூறியதாவது :-

1967லிருந்து எனக்கு கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களைத் தெரியும். அவர்கள் எதிலும் கண்டிப்பானவர்கள். கண்டிப்பானவர்களாக இருந்தாலும் மற்றவர்கள் கூறுவதைச் செவிமடுத்து அது சரியானதாக இருந்தால் ஒத்துப் போகக்கூடியவர்கள். சிறந்த அறிஞர்; திறமைசாலி; நல்ல பேச்சாளர். கம்பன் மணி மண்டபத்தை உருவாக்கக் கடுமையாக உழைத்தவர்கள். அதனுள் தமிழ்த்தாய் கோவிலையும் உருவாக்கி வந்தார்கள். கம்பன் மணி மண்டபத்தை நிறைவு செய்து வைப்பதும் தமிழ்த் தாய் கோவிலுக்கு அரசே உதவி செய்து முடித்துக் கொடுப்பதும்தான் நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய உண்மையான அஞ்சலியாகும்.

— இவ்வாறு சித. சிதம்பரம் அவர்கள் கூறினார்கள்.

தண்ட வரி

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் 1942ல் தீவிரமடைந்திருந்த போது காரைக்குடிப் பகுதியில் தண்ட வரி வசூலித்தார்கள். தேவகோட்டை சப் கோர்ட் எரிக்கப்பட்டது. சப் - கலெக்டர் பூட்டி வைக்கப்பட்டார். தேவகோட்டை ஆர்ச் அண்ணாமலை செட்டியார், தொண்டர் முத்தையா போன்றவர்கள் கலவரத்தில் ஈடுபட்டதற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சுதந்திரத்திற்கு முன் விடுதலையானார்கள்.

காரைக்குடியைச் சேர்ந்த ஏஎல். திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் பேட்டியின்போது கூறியதாவது:-

'கம்பன் அடிப்பொடி' அவர்களை எனக்குச் சிறு வயதிலிருந்தே தெரியும். அவர்கள் தன்னலம் கருதாதவர்கள். நேர்மையானவர்கள். நகரத்தார் சடங்கு முறைகள் பற்றித் தெளிவாக விளக்கம் கூறக்கூடியவர்கள். சிறந்த அரசியல்வாதி.

1981ல் கம்பன் அறநிலையின் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது ''அடுத்த ஆண்டு நான் உயிரோடு இருக்கிறேனே இல்லையோ, என் உடமைகள், வீடு அனைத்தையும் கம்பன் டிரஸ்டுக்குத் தந்துவிடுகிறேன்'' என்றார்கள். உறுப்பினர்கள் அவர்களுக்குச் சமாதானம் கூறி வீட்டையும் உடைமைகளையும் அவர்களே வைத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லி அவர்களைச் சம்மதிக்க வைக்கப் பெரும்பாடாய்ப் போய்விட்டது.

— இவ்வாறு ஏஎல். திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் கூறினார்கள்.

— —

காரைக்குடியைச் சேர்ந்தவர்களும் 'கம்பன் அடிப்பொடி' அவர்களுக்குப் பங்காளியுமான எஸ். எல். என். சாத்தப்ப செட்டியார் அவர்கள் பேட்டியின்போது கூறியதாவது :-

கம்பன் அடிப்பொடி அவர்கள் சிறு வயது முதலே பொது வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். ஆங்கில மொழியை நடப்பில் தெரிந்து கொண்டார்கள். எளியவர்களுக்கு உதவக் கூடிய பண்பாளர். பரோபகாரி. டாக்டர் அழகப்ப செட்டியார் கல்லூரியில் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தார்கள். முன்னாள் தமிழக அமைச்சர் நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் குடும்பத்திற்கு மிகமிக வேண்டியவர்கள். போர்க் காலத்தில் கடன் வாங்கியவர்களுக்கு ஆதரவாக சா. க. அவர்கள் தலைமையில் நாங்கள் 15 பேர் மலேயாவுக்கு நல்லெண்ணத்தூதுக் குழுவாகச் சென்று வந்தோம்.

— இவ்வாறு சாத்தப்ப செட்டியார் அவர்கள் கூறினார்கள்.

'கம்பன் அடிப்பொடி' பற்றி இஸ்மாயில்

என் போன்றவர்கள் கம்பனுடைய காப்பியத்தில் ஈடுபாடு கொள்வதற்குப் பெருத்த அளவில் காரணமாக இருந்தவர் கம்பன் அடிப்பொடி என்று சொல்வதில் நான் பெருமை கொள்கிறேன், நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே காரைக்குடி கம்பன் விழாவிற்கு அழைத்துப் பேசச் செய்து உற்சாகமூட்டி கம்பனில் எனக்கு இருந்த ஈடுபாட்டை வளர்க்க உதவினார். அந்தக் காலத்தில் அவர் போன்றவர்கள் கொடுத்த உற்சாகம்தான் இன்று கம்பனில் நான் கொண்டிருக்கும் ஈடுபாட்டுக்குக் காரணம் என்று சொல்வது மிகையாகாது.

— எம். எம். இஸ்மாயில்
(முன்னாள் தலைமை நீதிபதி)

ஒ. சிறுவயலைச் சேர்ந்த கவிஞர் அரு. நாகப்பன் அவர்கள் பேட்டியின்போது கூறியதாவது :-

கம்பன் அடிப்பொடி அவர்களை எனக்கு 19 ஆண்டுகளாகத் தெரியும். ஒ. சிறுவயல் திருவாசக விழாவில் அவர்கள் தலைமையில் நான் பேசியபோது ''மாணிக்கவாசகர் உதயசூரியன் போல் தோன்றினர்'' என்று பேசினேன். ''பெரியவர்களைப் பற்றிப் பேசும்போது இலக்கியச் சான்ருேடு பேச வேண்டும். இப்படியெல்லாம் பேசக் கூடாது'' என்று செல்லமாகக் கண்டித்தார்கள். அவர்கள் அறிவுரைகள் மூலம் என்னை அரசியல் தொடர்பில்லாத முழு நேர இலக்கியவாதியாக்கினர்கள். இலக்கியத் தொண்டு புரிய ஆசி கூறினர்கள். எனக்கு 1965ல் சா. க. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. எனது இல்லத்து நிகழ்ச்சிகளும் எனது இலக்கிய நிகழ்ச்சிகளும் அவர்கள் இல்லாமல் நடைபெற்றதில்லை. அவர்கள் எளிமையைக் கையாண்டார்கள். விழாக்களைச் சரியான நேரத்தில் தொடங்குவதில் கண்ணுக இருப்பார்கள். எந்த விழாவிற்குச் சென்ருலும் விழாவை நடத்துபவர்களிடம் வாகன வசதி கேட்பதில்லை. கம்பன் அடிப் பொடி அவர்களை வணங்கிக் கவிதை பாடிவிட்டுத்தான் நான் எந்த விழாவிலும் பேசுவது வழக்கம். அவர்கள்தான் என் தெய்வம். அவர்கள் வழியில்தான் நான் நடந்து வருகிறேன்; இனியும் நடப்பேன்.

— இவ்வாறு கவிஞர் அரு. நாகப்பன் அவர்கள் கூறினர்கள்.

கம்பன் கழகம் பற்றி கம்ப ராமன் கூறுகிறார் :

கம்பன் கழகம், தமிழ்த்தாய்க் கோவில் ஆகியவை பற்றி 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்களின் பேரன் திரு. கம்ப ராமன் கூறியதாவது :—

கம்பன் கழகம் 1939ல் தொடங்கப்பட்டது. தொடக்கம் முதல் எங்கள் ஐயா தான் அதற்குச் செயலாளர். காரைக்குடியில் நடைபெறும் கம்பன் விழா 'கம்பன் திருநாள்' என்றே அழைக்கப்படுகிறது. மற்ற ஊர்களில் நடைபெறும் விழாக்கள் 'கம்பன் விழா' என்றே அழைக்கப்படுகின்றன. கம்பன் திருநாள், தொடக்கத்தில் மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. 1972லிருந்து மணி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் மகம், பூரம், உத்தரம், அந்தம் ஆகிய 4 நட்சத்திரங்களில் கம்பன் திருநாள் நடைபெற்று வருகிறது.

கம்பன் கழகத்திற்கு இலங்கை, மலேஷியா மற்றும் தமிழ் நாட்டில் கல்கத்தா உட்பட 47 கிளைகள் உள்ளன.

கம்பன் மணிமண்டபத்திற்குத் தெற்கே தமிழ்த்தாய் கோவில் உருவாக்கப்பட்டு வருகிறது. உலகத்திலேயே மொழிக்காக உருவாக் கப்படும் முதல் கோவில் இதுதான். மாமல்லபுரம் தமிழ் நாட்டுக் கட்டிட சிற்பக்கலை பயிலகத்தின் மேலவர் திரு. வை. கணபதி ஸ்தபதி யின் மேற்பார்வையில் இது உருவாக்கப்படுகிறது. தி. மு. க. அரசு இக்கோவிலுக்கு 5 இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்தது. இன்னும் பணம் தேவைப்படுகிறது. இதுவரை 75% வேலை நடைபெற்றிருக் கிறது.

கம்பன் அறநிலை சார்பில் 'கம்பன் கற்பகம்' என்று ஒரு துவக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் 350 குழந்தைகள் கல்வி கற்கின்றனர்.

— இவ்வாறு திரு. கம்ப ராமன் கூறினார்.

நினைத்தது நடந்தது

'கம்பன் அடிப்பொடி' அவர்கள் தன் முதல் பேரனுக்கு 'கம்பன்' எனப் பெயர் வைக்க நினைத்தார்கள் என்றும் நம் நாடு சுதந்திரம் பெற்றபோது அவர் பிறந்ததால் அவருக்குக் 'காந்தி' எனப் பெயரிட்டதாகவும் இரண்டாவது பேரனுக்காவது அந்தப் பெயரைச் சூட்டலாம் என இருந்த போது அவர் கோகுலாஷ்டமியில் பிறந்ததால் 'கண்ணன்' எனப் பெயரிட்டதாகவும் மூன்றாவது பிறந்த பேரனுக்குத் தான் அவர்கள் நினைத்தபடி 'கம்ப ராமன்' எனப் பெயரிட்டு மகிழ முடிந்தது என்றும் அந்தக் 'கம்ப ராம'னே கூறினார்.

— 'எல்லெஸ்'

மணி விழா



இராயவரம் திரு. மு. அ. மு. சுப. கோவிந்தன் செட்டியார் — திருமதி அழகம்மை ஆச்சி ஆகியோரின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 10—7—82 அன்று இராயவரத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்று தினம் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 'மீனாட்சி கல்யாணம்' என்னும் பொருள் பற்றி இன்னிசைச் சொற்பொழிவாற்றினார்கள். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் *S. T.* காசிராஜன் அவர்கள் தலைமையில் தமிழக ஊரகத் தொழில் மற்றும் பால்வள நிறுவன அமைச்சர் மாண்புமிகு *K. A.* கிருஷ்ணசாமி அவர்கள் மு. அ. மு. சுப. கோவிந்தன் செட்டியார் அறக்கட்டளையைத் துவக்கி வைத்தார்கள். அன்று இரவு பஞ்சமூர்த்திகளின் திருஉலாக் காட்சியுடன் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

உங்கள் குரல்

தங்கள் ஆகஸ்ட் இதழில் வெளியான கவிஞர் சிவல்புரி சிங்காரம் எழுதிய 'கரும்பு தின்னக கூலி ஏனோ?' என்ற கவிதையைப் படித்தேன்-ரசித்தேன்-சுவைத்தேன். கண்ணீர் விடும் நம்குலப் பெண்களின் நிலைமையை பன்னீர்க் கவிதைகளால் படம் பிடித்துக் காட்டியிருப்பது அற்புதமாக இருந்தது. தொடரட்டும் பணி!

— அழகாபுரி முத்தப்பன், பி. அழகாபுரி

மதுரை நகரத்தார் சங்கத்தில் கம்பன் அடிப்பொடிக்குப் புகழஞ்சலி

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களின் மறைவையொட்டி மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நகர விடுதியில் 9—8 82 அன்று சங்கத் துணைத் தலைவர் கலைமகள் இராம. நடராசன் செட்டியார்அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.



இறை வணக்கத்திற்குப் பிறகு செயலாளர்களில் ஒருவரான இராம. ஏகப்பன் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை வாசிக்க கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப் பெற்றது.

கவிஞர் இராகவன் முத்து கவிதை அஞ்சலி செலுத்தினர்.

சு. குழந்தைநாதன்

அடுத்துப் பேராசிரியர் சு. குழந்தைநாதன் அவர்கள் பேசினுர்கள். அவர்கள் பேசும்போது சா. கணேசன்அவர்கள் பட்டை தீட்டப்பட்ட வைரம் என்றும் பல்கலை வித்தகர் என்றும் பிடிவாதக்காரர் என்றும் பிடிவாதத்தில் கம்பனை விடவில்லை என்றும் அரசியலில் தக்க தலைமையில்லாமல் பின்னுக்குத் தள்ளப் பட்டார்கள் என்றும் நேரத்தைப் பொன்னுகை மதிப்பவர்கள் என்றும் அவர்கள் செல்வம் போல் புகழை விட்டுச் சென்றிருக்கிருர்கள் என்றும் கூறினுர்கள்.

சுப. அண்ணுமலை

டாக்டர் சுப.அண்ணுமலை அவர்கள் பேசியபோது கம்பன் அடிப்பொடி அவர்கள் விசாலமான உள்ளம் படைத்தவர்கள் என்றும் படித்தறிந்த புலமை பெற்றவர்கள் என்றும் அரசியலில் ஏமாற்றம் கண்டாலும் அவர்கள் ஒரு இரும்பு மனிதர் என்றும் அவர்களைப் போன்ற நல்ல மனிதர்கள் இந்தத் தலைமுறையில் தோன்ற முடியாது என்றும் கூறினுர்கள்.

சுப. ராஜகோபால்

அடுத்துப் பேசிய சுப. ராஜகோபால் அவர்கள் தொல் பொருள் ஆய்வுத்துறை, பெரிய துறையாக மாறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் கம்பன் அடிப்பொடி என்றும் புலவர்களை, கவிஞர்களை வரலாற்று அறிஞர்களை உருவாக்

ஃ சென்னையில் 'நங்கூரம்' என்று ஒரு செய்தி ஏடு வெளி வருகிறது. அதை வெளியிடுபவர்கள் யார் தெரியுமா? சென்னை துறைமுகத் தொழிலாளர்கள்!

ஃ உலகின் மிகப்பெரிய தீபகற்பம் எது தெரியுமா? நாம் வாழும் இந்தியாதான்!

— வி. ஆர். சின்ன அருணுசலம், தேவகோட்டை.

கியவர்கள் அவர்கள் என்றும் கூறினார்கள்.

சிற்சபேசன்

பேராசிரியர் கண. சிற்சபேசன் அவர்கள் பேசியபோது கம்பனைத் தவிர வேறு சிந்தனையே இல்லாமல் வாழ்ந்தவர்கள் கம்பன் அடிப்பொடி அவர்கள் என்றும் 40 ஆண்டுகளாக குறித்த நேரத்தில் விழாவைத் தொடங்கிய ஒரே மனிதர் அவர்களென்றும் கூறினார்கள்.

சொ. சொ. மீ.

பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் பேசியபோது காரைக்குடியைக் கம்பன்குடியாக்கியவர்கள் அவர்கள் என்றும் காரைக்குடி சாமிநாதன் செட்டியாரவர்கள் கம்பனுக்குக் கணேசன் அவர்களைத் தத்துக்கொடுத்து விட்டார்கள் என்றும் சாவன்னா கானா இல்லையென்றால் 17 ஆண்டுகள் தமிழ் அற்றுப் போயிருக்கும் என்றும் பிடிவாதம் கூட அவர்களுக்குப் பெருமையைக் கொடுத்தது என்றும் எதற்கும் தலைப்புக் கொடுப்பதில் அவர்கள் சக்கரவர்த்தி என்றும் இன்றைய இலக்கிய மறுமலர்ச்சிக்கு தொடக்க விழாக் கண்டு கம்பனுக்குக் கலிகாலச் சடையப்பனாக வாழ்ந்து சாவிலும் வாழ்வு பெற்றவர்கள் கம்பன் அடிப்பொடி அவர்கள் என்றும் தேவலோகத்தில் கம்பன் விழா நடத்த அவர்களை அழைத்துச் சென்று விட்டார்கள் என்றும் கூறினார்கள்.

கேள்வி - பதில் பகுதி

''நகரத்தார் குரல்'' அக்டோபர் '82 இதழில் **கேள்வி-பதில்** பகுதி தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நகரத்தார் நல மேம்பாடு, இலக்கியம், பொருளாதாரம் மற்றும் பொதுவான எல்லாக் கேள்விகளுக்கும்

பழ. கருப்பையா

அவர்கள் பதிலளிக்க மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

வாசக அன்பர்களே உங்களது கேள்விகள் எதுவானாலும் அவற்றைக் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதியனுப்புங்கள் :

கேள்வி-பதில் பகுதி

''நகரத்தார் குரல்''


25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625001.



1957ல் சொ. முருகப்பா அவர்களின் 'இராம காதை' புத்தக வெளியீட்டு விழாவில் கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், திரு. சொ.முருகப்பா, திரு. எஸ்.வையாபுரிப் பிள்ளை, வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் ஆகியோர் — காணக்கிடைக்கா கவின்மிகு காட்சி!


புகைப் படங்கள் உதவி சுந்தரம் ஸ்டுடியோ, காரைக்குடி.

காரை தந்த கற்பகம்



முன்னமருட் கம்பனெனும் நாமம் கேட்டான்
மூர்த்தியவன் இராமகதை முழுதும் கேட்டான்
பின்னருள்ள சான்றோர்கள் பேசக் கேட்டான்
பேர்த்துமவன் சேவடிக்கே பிச்சன் ஆனன்
அன்னையுடன் அத்தனுமே கம்ப னென்றன்
அவன்பெயராய்த் தன்பெயரை ஆக்கிக் கொண்டான்
தன்னைமறந் திட்டான் தன் நாமம் கெட்டான்
தலைப்பட்டான் சேர்ந்திட்டான் தலைவன் தாளே.


— சொ. சொ. மீ. சுந்தரம்




காரைக்குடியில் நடைபெற்ற அரசியல் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களோடு கம்பன் அடிப்பொடி அவர்கள் உரையாடும் காட்சி.




கம்பன் திருநாள் ஒன்றில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் தொழிலதிபர் ஜி. கே. சுந்தரம் அவர்களுக்கும் இடையில் கம்பன் புகழ் பாடி கன்னித் தமிழை வளர்த்த கம்பன் அடிப்பொடி அவர்கள். இடது கோடியில் திருமதி உமையாள் இராமநாதன் அவர்கள்.



காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்க மேடையில் கவியரசர் கண்ணதாசனுக்கு கம்பன் அடிப்பொடி அவர்கள் மாலையணிவிக்கும் காட்சி.



கோவிலூர் மடாலயத்தில் திருச்சி சுவாமிகளிடம் பிரசாதம் பெறும் கம்பன் அடிப்பொடி அவர்கள். படத்தில் கோவிலூர் இராமநாத சுவாமிகளையும் காணலாம்.



கம்பன் அடிப்பொடி அவர்கள் அலிபுரம் சிறையிலிருந்து விடுதலையாகி வந்தபோது சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் (அமர்ந்திருப்போர் — இடமிருந்து வலமாக) திருவாளர்கள் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, எம். பக்தவத்சலம் (முன்னாள் தமிழக முதல்வர்) குமாரசாமி ராஜா (முன்னாள் சென்னை மாநில முதல்வர்) சி. என். முத்துரங்க முதலியார், கம்பன் அடிப்பொடி (தாடியுடன் இருப்பவர்கள்) எம். என். எஸ்டி. சிதம்பரம் செட்டியார், டி. எஸ். சொக்கலிங்கம் (தினமணி) டி. கே. சிதம்பரநாத முதலியார், தீபம் நடராஜன் (சிறுவனாக) பி ஸ்ரீ ஆச்சாரியார் ஆகியோர். நடு வரிசையில் மூன்றாவதாக மீசையுடன் காட்சி தருபவர் ம. பொ. சி. அவர்கள்.

அறிந்துகொள்ளுங்கள் !

ஃ இந்தியாவில் உள்ள மொத்த வானொலி ஒலி பரப்பு நிலையங்கள் 86.

ஃ ஒட்டகம் கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் அதனால் பார்க்க முடியும்.

ஃ ஃபியட் காரை அறிமுகப்படுத்திய நாடு— இத்தாலி.

ஃ குழந்தைகள் பிறக்கும்போது 350 எலும்பு களுடன் பிறக்கின்றன.

ஃ போர்ச்சுக்கீசியர் மூலமாகத்தான் உருளைக் கிழங்கு இந்தியாவிற்கு வந்தது.

ஃ மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் — சிங்கம்.

ஃ எகிப்தின் ஒப்பற்ற அரசியான 'கிளியோ பாட்ரா' எப்போதும் கழுதைப்பாலில் குளிப் பது வழக்கம்.

ஃ நாய்க்கு நிறம் பிரித்துணரும் திறமை கிடை யாது.

ஃ பூப்பந்தாட்டத்திற்கு அளிக்கப்படும் கோப் பை 'துங்கு அப்துல் ரஹ்மான்' என்பதாகும்.

ஃ ஆமைக்குப் பல் கிடையாது.

ஃ சூரியன் தன்னைத் தானே சுற்றிக் கொள்ள 27 நாட்கள் ஆகின்றன.

ஃ பாறையைப் பிளக்க உதவும் பொருள் 'நைட்ரோ கிளிசரின்' என்பதாகும். இதனைக் கண்டுபிடித்தவர்—'நோபெல்'.

ஃ பூமிக்கு வெகு அண்மையில் உள்ள நட்சத் திரம் 'ஆல்பா ஸெண்டாரி' என்பதாகும். இது சூரியன் உள்ள தூரம் போல இரண் டரை இலட்சம் மடங்கு தூரத்தில் உள்ளது.

ஃ விரல் முத்திரை பதியும் வழக்கம் முதன் முத லில் சீனாவில்தான் அமலாக்கப்பட்டது.

ஃ சதுரங்க விளையாட்டின் பிறப்பிடம் இந்தியா தான்.

ஃ அமெரிக்காவின் தேசீய மலர் 'ரோஜா'

ஃ அமெரிக்காவின் தேசீய விளையாட்டு 'பேஸ்- பால்' ஆட்டம் தான்.

ஃ ஜப்பான் நாட்டின் பார்லிமெண்டின் பெயர் 'டயட்'.

தொகுப்பு : சொ. விஸ்வநாதன்
ஆவினிப்பட்டி

கம்பன் அடிப்பொடி பற்றி அரசியல் தலைவர்கள், அறிஞர்கள்

விடுதலைப் போராட்ட வீரராக விளங்கிய கம்பன் அடிப்பொடி அவர்கள் நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு தமிழ்த் தொண்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு தமிழ் மக்கள் என்றென்றும் நினைவு கூரத்தக்கதாகும். அவர்களுடைய மறைவினால் தமிழகம் ஒரு மிகச் சிறந்த நாட்டுப் பற்றுளரையும் தமிழ் அறிஞரையும் தன்னலமற்ற சமுதாயத் தொண்டரையும் இழந்துவிட்டது.

— இராம. வீரப்பன்
(செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்)

சிறந்த தியாகியும் விடுதலைப் போராட்ட வீரரும் தமிழைத் தன் உயிர் போலக் கருதிப் பணியாற்றியவரும் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவரும் தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதில் நீங்காத ஆர்வம் கொண்டவரும் பயன்தரத்தக்க தமிழ் நூல்களை இயற்றித் தந்தவரும் சுடுசொல் கூறி அறியாதவரும் தமிழக வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவருமான எனது அன்புக்குரிய காரைக்குடி சா. கணேசனார் அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த வேதனையடைகிறேன்.

— மு. கருணாநிதி
(முன்னாள் தமிழக முதல்வர்)

கம்பன் அடிப்பொடி அவர்கள் இயற்கை யெய்தியது தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் சிறை சென்ற தேசபக்தர்; பழுத்த காந்தியவாதி; தமிழ்ப் பற்றுளர்; தெய்வ பக்தர். கம்பன் புகழ் விளக்கை இமயத்தின் உச்சியிலே ஏற்றிவிட்டு அடிப்பொடி மறைந்து விட்டார். செட்டிநாடு தந்த முதுபெருந் தேசபக்தர்களின் எண்ணிக்கை சா. கணேசன் மறைவோடு முடிந்து விட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது.

— ம. பொ. சிவஞானம்
(தலைவர், தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை)

தேசியத் தமிழன். கம்பனில் தோய்ந்த சுவைஞன். புலமைக் கனிகளை தோய்த்தெடுக்க கம்பன் கழகக் கழனி கண்ட சொல்லேர் உழவர் கணேசன். பொன்பிடி போட்ட கண்ணாடி அணிந்து தமிழ் எடுத்துக் கேட்போரைத் தன் பிடியில் வைத்து தமிழ்ச் சுவையில் மூழ்கடிக்கும் கம்பன் அடிப்பொடியை இனிக் காண்பதெப்போது?

— குமரி அனந்தன்
(தலைவர், கா. கா. தே. காங்கிரஸ்)

இலக்கிய விழாக்களுக்கு அந்தஸ்தும் பெருமையும் சேர்த்தவர். விழாவினைப் பொழுது போக்காகவும் கேளிக்கையாகவும் நடத்தாமல் அறிவு சிறக்கவும் பண்பாடு மேம்படவும் நடத்திக் காட்டியவர். பெருமித வாழ்வினர்; புகழ் பூத்த சான்றோர்; கலந்துரையாடலில் எங்களுக்குக் களிப்பை நல்கிய

வர்; என் உடன்பிறவாச் சகோதரர். அவரோடு வாழ்ந்த காலங்களை என்றும் மறக்க முடியாது.

— ஜி. கே. சுந்தரம்
(தொழிலதிபர், கோவை)

உடல், பொருள், உயிர் அனைத்தையும் நாட்டு விடுதலைக் குப் பலியாக்கிய பாரதத் தொண்டர்; புலவர்க்குப் புலவர்; அறிஞர்க்கு அறிஞர்; கவிஞர்; கல்வெட்டுத் திறனர்; பல்கலை வல்லுனர், இத்துணை நிறைவுகள் வாய்ந்த ஒரு தமிழ்ப் பெருமகன் கம்பனுக்கு அடிப்பொடியாகக் கிடைத்தது இராம னுக்கு கம்பன் கிடைத்தது போல் பெறற்கரிய பேருகும்.

— டாக்டர் வ. சுப. மாணிக்கம்

கம்பனுக்கோர் ஆழ்வார் இல்லை என்ற குறையைத் தீர்க்கப் பிறந்தவர் சா. கணேசன். கம்பன் அடிப்பொடியாகி கம்பன் இலக்கியத்தைப் பரப்பக் கன்னித் தமிழ் பாடி வந்த மரபுக் காவலன். அவரது மறைவு தமிழ் நாட்டுப் பொது வாழ்வுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பேரிழப்பாகும்.

— ஏ. என். சிவராமன்
(ஆசிரியர், தினமணி)

சா. கணேசன் அவர்கள் நேரம் தவருதவர்; நேர்மை யாளர்; கண்டிப்பானவர்; கருத்தாய்ப் பணி செய்தவர்; கண்ணியமிக்கவர்; இலட்சங்களுக்காக வாழாமல் இலட்சியங் களுக்காக வாழ்ந்த பெருமகனர்.

— வி. என். சிதம்பரம்
(ஆசிரியர், நகரத்தார் குரல்)



விசாலம் சிட் பண்ட்ஸ் உரிமையாளர் ஆர் எம். அருணசலம் செட்டியார் அவர்களுக்கு ஈரோடு நகரத்தார் சங்கம் அளித்த வரவேற்பில் சங்கத் தலைவர் கே. ஆர். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வரவேற்றுப் பேசுகிருர்கள். இடதுபுறம் ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள்.



பாரதக் குடியரசுத் தலைவர் மேதகு ஜெயில் சிங் அவர்கள் 24—8—82 அன்று மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கு வருகை தந்தபோது அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப் பட்டது. படத்தில் (இடமிருந்து வலமாக) திரு. என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி (அறங்காவலர்) திரு. ஆர். சண்முக சிகாமணி (அறநிலையத் துறை ஆணையர்) திரு. வி. என். சிதம்பரம் (அறங்காவலர் குழுத் தலைவர்) திருமதி மஞ்சித் கௌர் (குடியரசுத் தலைவரின் புதல்வி) ஆகியோர் உள்ளனர்.



வைஸ்யா வங்கித் தலைவர் திரு. டி. கே. கே. பகவத் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருகை தந்தபோது எடுத்த படம். படத்தில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரமும் தொழிலதிபர் திரு. எம். சி என். மாணிக்கமும் உள்ளனர்.

தீப்பூக்கள்

பேராசிரியர் கண. சிற்சபேசன், எம். ஏ.,

செட்டிநாட்டின் தெருக்களில் 'முறைதலை' பேசுவதற்காக ஓயாமல் நடக்கும் ஆச்சிகளின் திருப்பாதங்களில் எனது தீப்பூக்களை அருச்சிக்கின்றேன்.

தெய்வமே!

இளங்கன்னியின் இதயப் பூவை உன் திருவடிக்கு இடுகிறேன். உனக்கே அது சமர்ப்பணம். உன் திருவடிக் கல்லை அது கனியாக்கட்டும்.

அவள் வடிக்கும் கண்ணீர்ப் பூக்களை உன் திருவடிகளில் ஊற்றுகிறேன். உனக்கே அவை சமர்ப்பணம். உன் திருவடிக் குளிரை அது தகிக்கட்டும்.

அவள் விடும் பெருமூச்சுப் புயலை உன் பாதங்களில் வீசுகிறேன். உனக்கே அது சமர்ப்பணம். உன் திருவடிச் சூட்டை அது ஆற்றட்டும்.

பாழே சூடிக் கழித்த அவளது தலைப்பூவை உன் திருவடிகளுக்குத் தொடுக்கிறேன். உனக்கே அது சமர்ப்பணம். ஓயாமல் நடக்கும் உன் திருவடிக்கு அது தூது ஆகட்டும்.

கெஞ்சும் அவளது விழிப்பூக்களை உன் திருவடிகளில் எறிகிறேன். உனக்கே அவை சமர்ப்பணம். உனது திருவடி வழியை அது மறிக்கட்டும்.

பொங்கும் பெற்றோரின் மானப்பூவை உன் திருவடியில் மெத்தென்று வைக்கிறேன். உனக்கே அது சமர்ப்பணம். உன் திருவடி வேகத்தை அது குறைக்கட்டும்.

திருவடியே! நில்!

கொதிக்கும் நல்லவர் தீப்பூவை உன் திருவடிக்குச் சூட்டுகிறேன். உனக்கே அது சமர்ப்பணம். உன் திருவடியை அது முடமாக்கட்டும்.

கற்பக நிலையம்

கம்பன் அடிப்பொடி அவர்கள் பிள்ளையார்பட்டிக் கோவிலின் பரம்பரைத் தர்மகர்த்தா ஆவார். பிள்ளையார்பட்டிக் கோவிலின் மூலவர் கற்பகப் பிள்ளையார் ஆவார். எனவேதான் காரைக்குடி மேல ஊரணித் தெருவில் உள்ள கம்பன் அடிப்பொடி அவர்களின் இல்லத்திற்கு 'கற்பக நிலையம்' எனப் பெயரிட்டிருக்கிறார்கள் போலும்! கம்பன் அறநிலை சார்பில் நடத்தப்படும் துவக்கப் பள்ளிக்கு 'கம்பன் கற்பகம்' என்று பெயர்.



பாகனேரி

வே. வே. நா. கண்ணுத்தாள் B. A.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று ஔவையார் கூறியது போல ஆலயத்தைத் தொழுகின்ற பக்தர்கள் நிறைந்தது எங்கள் ஊர் பாகனேரி.

'மங்கை பாகன்' என்பது உமாமகேச்வரரான சிவபெருமானைக் குறிப்பது. இச்சொற்களில் 'மங்கை' என்ற முதற் சொல் நீங்கி 'பாகன்' என்ற எஞ்சிய சொல் மட்டும் நின்ருலும் கூட அது சிவ பெருமானையே குறிக்கும். இங்கு 'பாகன்' என்ற சொல்லும் 'ஏரி' என்ற சொல்லும் சேருவதால் உருவாகும் 'பாகனேரி' என்ற சொல் லிற்கு உமையொரு பாகனுகிய சிவபெருமான் விரும்பிய உறையும் நீர்வளமிக்க ஊர் என்றும் ஏரியைப் போன்று விரிந்து பரந்த உள்ள முடையவர்கள் வாழும் ஊர் என்றும் பொருள் கொள்ளலாம்.

புலவர்கள் போற்றிப் புகழ்ந்து பாடும் ஊரான பாகனேரி, இராம நாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க பெரிய ஊராக விளங்குகிறது. காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் அங்கம் வகிக்கிறது.

இளையாற்றக்குடி, வைரவன் கோவில், மாற்றூர், பிள்ளையார் பட்டி ஆகிய கோயிற் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 350 புள்ளி நகரத்தார் இங்கு இருக்கிருர்கள். பாகனேரியின் பெருமைக்கோர் உறைவிட

''கம்பன் திருநாள் நடைபெறும் வேளையில் நான் இறந்து போய்விட்டால் விழாவை முற்றிலுமாக முடித்து விட்டுத்தான் என்னுடைய காரியங்களை நடத்த வேண்டும். எதற்காகவும் கம்பன் திருநாள் நடைபெறுவது தடைப்படக் கூடாது'' என்று, மறைந்த பல்கலை வித்தகர் 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்கள் இரண்டொரு முறை தன்னிடம் கூறியிருப்பதாக, கம்பன் அறநிலையில் 12 ஆண்டு களாகப் பணியாற்றிவரும் திரு. எம். ஸ்ரீதரன் பேட்டியின் போது கலங்கியவாறு கூறினர்.

மாகத் திகழ்வது இங்குள்ள அருள்மிகு ஸ்ரீ புல்வாய்நாயகி அம்மன் கோவில். பெரிய இராஜகோபுரத்துடன் திருக்குளமும் இணைந்தது இக்கோவில். மனம், மொழி மெய்யால் அறம் பேணும் பெரியார் அரு.கி.கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் மேற்பார்வையில் இங்குள்ள திருத்தேர் மிகவும் எழிலாகவும், கம்பீரமாகவும், உறுதியாகவும் அமைக்கப்பட்டு 8—2—1973 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. மேலும் அரு. கரு. வே. வேலாயுதம் செட்டியார் அவர்கள் மேற்பார்வையில் ரௌத்ரி ஆண்டு சித்திரைத் திங்களில் (28-4-80 அன்று) அருள்மிகு ஸ்ரீ புல்வாய்நாயகி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

இங்கு சிவன் கோவில், பெருமாள் கோவில், ஐயனர் கோவில் மற்றும் சில பிள்ளையார் கோவில்களும் உண்டு. அவைகளில் ஒரு கோவிலுக்குச் 'செட்டிக்குளத்துப் பிள்ளையார் கோவில்' என்ற பெயருண்டு.

'நாச்சியத்தாள்' என்ற சக்தி வாய்ந்த தெய்வம் இங்கு உள்ளது. அதைக் கண்டனூர், ஆத்தங்குடி, செம்பனூர் முதலிய ஊர் மக்கள் வந்து வணங்கி வழிபட்டுத் தீராத குறைகளை எல்லாம் தீர்த்துக் கொண்டு செல்கிறார்கள்.

தைத் திங்கள் முதல்ச் செவ்வாயன்று நகரத்தார் ஒன்றுகூடி அம்மன் கோவில் முன்பு செவ்வாய்ப் பொங்கலிடுகிறார்கள். ஆடித் திங்கள் முதல் வாரம் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இரு தினங்களும் மகேஸ்வர பூசை நடத்தி நகரத்தார் சேர்ந்து பூசை மடத்தில் அன்னதானம் வழங்குகிறார்கள்.

இங்கு மாதந் தவறாமல் திருவிழாக்கள் நடைபெற்றாலும் அம்மன் கோவிலில் நடைபெறும் ஆனித் திங்கள் தேர்த் திருவிழாவே மிகவும் சிறப்பானது. மேலும் சித்திரைத் திங்கள் வருடப்பிறப்பு, பூச்சொரிதல் விழா, காவடியெடுப்பு, மாசி மகம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

'வித்துவான் காசிச் செட்டியார்' என அன்புடன் அழைக்கப்படும் வெ. பெரி. பழ. மு. காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்கள் வாசகசாலை ஒன்றை நிறுவி அனைவருக்கும் பயன்படும்படி செய்துள்ளார்கள்.

கம்பன் அடிப்பொடியின் குடும்பம்

கம்பன் அடிப்பொடி அவர்களது மனைவியின் பெயர் — மீனாட்சி ஆச்சி. மைத்துனரின் பெயர் (மனைவியின் தம்பி) — இரா. மீனாட்சி சுந்தரம். மாப்பிள்ளையின் பெயர் - பழ. சண்முகம். மகளின் பெயர் — மங்கையர்க்கரசி ஆச்சி. பேரன்கள் - கண்ணன், கம்ப ராமன். பேத்திகள் — வாசுகி, கண்ணகி. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் செல்வி கண்ணகிக்கு மட்டும் திருமணம் நடைபெற வேண்டும்.

பெரி. அழ. மு. அண்ணுமலை செட்டியார் அவர்கள் தனியாக பிள்ளையார் கோவில் ஒன்றைக் கட்டி அதற்கு முன்பு ஒரு குடிநீர் ஊரணியும் ஏற்படுத்தி சமுதாயச் சேவை செய்துள்ளார்கள். கண. அருணுசலம் செட்டியார் அவர்கள் பூங்கா ஒன்றையும், மகளிர் மருத்துவ மனையையும் நிறுவி பொதுமக்களுக்கு உதவி செய்துள்ளார்கள். திருமதி தெய்வானை ஆச்சி அவர்கள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றை உருவாக்கியுள்ளார்கள்.

நகரத்தார் விடுதி, நகரத்தார் மாளிகை, நகரத்தார் பூசைமடம் முதலியவைகள் இங்கு உள்ளன. ஏழை, எளிய மாணவர்களுக்கும் முதல் மதிப்பெண் வாங்கும் மாணவர்களுக்கும் அரு. கி. கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கி வருகிருர்கள்.

இங்கு 40 சதவிகிதம் படித்தவர்களும், 60 சதவிகிதம் படிக்காதவர்களும் உள்ளனர். ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற பழமொழிக் கேற்ப இங்குள்ள நகரத்தார் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டுகிருர்கள். மேலும் இங்குள்ள நகரத்தார் சமயத்திலும், அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக இருக்கிருர்கள். இப்பகுதியில் முதன் முதலில் படித்து B. A. பட்டம் பெற்றவர் மாணிக்கம் செட்டியார் அவர்கள். அவர்களை மக்கள் 'B.A. மாணிக்கம் செட்டியார்' என்றே அழைக்கிருர்கள்.

வாழ்கோட்டை நாட்டாரும், நாட்டுக்கோட்டை நகரத்தாரும் ஒன்று சேர்ந்து வாழும் பெருமை பெற்றது எங்கள் ஊர் பாகனேரி.

நகரத்தாரால் ஊரின் நடுவே வெட்டப்பட்ட 'பட்டப்பிளான்' என்ற குடிநீர் ஊரணி ஊர் மக்களுக்கு நீரை வாரிவாரி வழங்கிச் சிவந்த தோற்றமளிக்கிறது. எங்கள் ஊர் புது வளவு, பழைய வளவு என்று இரு பிரிவுகளைக் கொண்டது.

மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவினுல்கூட இங்கு வறட்சி என்பதையே காணமுடியாது. மழை தவருமல் பெய்கின்ற சிறப்பும் அருள் சக்தியும் அருள்மிகு அம்மனையே சாரும்.

மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் எங்களுக்குப் பெருமை சேர்க்கும் எங்கள் ஊர்த் தலைவர் ஆவார். உ. சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராவார்.

எங்கள் ஊர் மஞ்சுவிரட்டு மிகவும் பிரசித்தி பெற்றது. ''முரட்டுக் காளை'' திரைப்படத்தின் படப்பிடிப்பு எங்கள் ஊரில் நடைபெற்றது.

பலவகைச் சிறப்புக்களையும் பெற்ற எங்கள் ஊர் மக்கள் பல்கலையும் பெற்று நீடூழி வாழ அருள்மிகு ஸ்ரீ புல்வாய்நாயகி அம்மனை வணங்குகிருேம்.

பட்டினத்தடிகள் திருவிழா

'எவர்பிரைட்' நாச்சியப்ப செட்டியார்

காவிரிப்பூம்பட்டினம் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளுக்கு 25—7—82 முதல் 5—8—82 முடிய பன்னிரெண்டு நாட்கள் திருவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நகர விடுதியில் பன்னிரெண்டு நாட்களும் நிலையாகத் தங்கியிருந்த பெருமக்களும் வரப் போக இருந்த பேராண்மையாளர்களுமாக ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் கண்டு-கேட்டு-உண்டு உவந்தனர். அவர்களிலே ஆச்சிமார்கள் எண்ணிக்கை அதிகம் அதிகம்.

மிகுதியும் இரவு நேரங்களிலே நிகழ்ந்த ஒவ்வொரு நாள் திருவிழா வரலாற்றையும், திருவிழாவை முன்நின்று நடாத்துவோரில் ஒருவரான காரைக்குடி பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் ஒலிபெருக்கி மூலம் நன்கு புரியும் வண்ணம் தெளிவாகவும் நகைச்சுவை ததும்பவும் கூறியது பேரானந்தமாய் அமைந்தது.

திருவிழா வரலாற்றைத் தழுவி நடைபெற்ற திருவெண்காடருக்குக் கல்யாணம் பேசி முடித்த நிகழ்ச்சியும், மருதவாணக் குழந்தையின் நிறைக்கு பொன் நிறுத்துக் கொடுத்து அப்பால் வெள்ளிக் கட்டிலில் இட்டுத் தாலாட்டிய நிகழ்ச்சியும், திருவெண்காடரின் அன்னையார் பரிபூரணமடைந்ததற்கு ஒப்பாரி வைத்த நிகழ்ச்சியும் பெரிதும் குறிப்பிடத்தக்கவை.

திருவெண்காடருக்குத் திருமணம் பேசி முடித்ததற்குச் சான்றாக கானாடுகாத்தான் செட்டிநாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆர். ராமனாதன்செட்டியார் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்கள் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டார்கள்.

விழாவினையொட்டி சிறப்புச் சொற்பொழிவுகளும், கவியரங்கமும், பட்டினத்தாரைப் போற்றி தமிழ் அர்ச்சனையும், இடையிடையே வேறு

காணவில்லை !

அன்புள்ள அப்பாவுக்கு,

தாங்கள் வீட்டை விட்டுப் போனதிலிருந்து அம்மாவும் நாங்களும் சாப்பிடாமல் கவலையுடன் இருக்கிறோம். எனவே தாங்கள் எங்கிருந்தாலும் உடனே வந்து சேரவேண்டியது. அம்மாவுக்குப் பிடித்தமான சமையல் செய்யத் தெரிந்தவர்கள் யாரும் இங்கே கிடைக்கவில்லை.

இப்படிக்கு,
உங்கள் அன்பு மகன்,

— வி. ஆர். சின்ன அருணாசலம், தேவகோட்டை.

சில பாடல்களும், நாதசுர இசையும், சகஸ்போன் வாத்திய இசையும் முழங்கின.

மதுரை அருள்மிகு மீனுட்சிசுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங் காவலர் குழுத் தலைவரும், ''நகரத்தார் குரல்'' ஆசிரியருமான திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. பழ. கருப்பையா, சட்ட மன்ற உறுப்பினர் திரு. சித. சிதம்பரம், திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. 'எவர்பிரைட்' நாச்சியப்ப செட்டியார், வலையபட்டி திரு. திருப்பதி செட்டியார், பேராசிரியர் திரு. சுப. கதிரேசன் ஆகியோர் பேருரை நிகழ்த்தினர்.

கவியரங்கிலே பலவான்குடி புலவர் வே. வேலப்பன், பொற் கிழிக் கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம், தாலாட்டுக் கவிஞர் து. க. குமரப்பன் ஆகிய மும்மணிகள் கவிமழை பொழிந்தனர்.

புலவர் வேலப்பன் பட்டினத்தார் மீது தாம் இயற்றிய தமிழ் அர்ச் சனையை பட்டினத்தார் சன்னதியிலும், திரு. அழ. அண்ணுமலை ஒவ் வொரு நாளும் வரலாற்றை ஒட்டிய பாடல்களை வேடிக்கையாகவும், பல்வேறு தோற்றங்களுடனும் பாடியதோடு, அன்னை ஞான கலாம் பிகை பரிபூர்ணமடைந்த வீட்டில் தாமே இயற்றிய ஒப்பாரிப் பாடலை யும் பாடினுர்கள்.

அன்னை ஞானகலாம்பிகை பரிபூரணமடைந்த தகவல் தெரிந்ததும் துக்கம் விசாரிக்க வந்த திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், ஆயா ளுக்குப் பேரனுக நடித்த காரைக்குடி திரு. அருணுசலம் செட்டியாரிடம் கதறி அழுது கைக்குட்டையால் அவரது கண்களைத் துடைத்து கைக் குட்டையைப் பிழிந்து கண்ணீரை வடித்துக் காட்டிய காட்சி மிகச் சோகமாக இருந்தது.

10ஆம் திருநாளான குருபூசை தினத்தன்று திருப்பெருந்திரு கோவிலூர்ஆதீனம் அவர்கள் வருகை தந்து பெருமைப்படுத்தினுர்கள். அவர்களுக்கு மங்கல இசை ஒலிக்க பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பெற்றது.

இவ்வாறு திருவிழா பெருவிழாவாக நிறைவெய்தியது.

நகரத்தார் குலத்துதித்த நற் பெரியார்
நாளெல்லாம் போற்ற வல்ல திருவெண்காடர்
இகத்தையே துறந்து சென்ற எமது ஏந்தல்
இனிய மகான் பட்டினத்துஅடிகள் வாழ்க.

வாழ்க தமிழ்! வளர்க சைவம்!

எழுத்தாளர் : எனது பத்திரிகையைப் படிக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா?

நண்பர் : என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள். உங்கள் பத்திரிக்கையைப் 'பார்க்காமல்' எனக்குத் தூக்கமே வராதே!

— வி. ஆர். சின்ன அருணுசலம், தேவகோட்டை.

வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில்

பெரி. மெய்யப்ப செட்டியார்

(தலைவர், நகரத்தார் சங்கம், வேலூர்)

புதிதாகக் கோவிலைக் கட்டி விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்து, மருந்து சாற்றிக் கும்பாபிஷேகம் செய்வது ஒரு வகை; ஏற்கனவே வழி பாடு நடந்து வரும் கோவிலைச் செப்பனிட்டுப் புதுப்பித்து மருந்து சாற்றிக் கும்பாபிஷேகம் செய்வது மற்றொரு வகை. இவை இரண் டிலும் மாறுபட்டு அநேக ஆண்டுகளாக விக்ரகங்கள் இன்றி வழிபாடு இல்லாத கோவிலில் விக்ரகங்களைப் பிரதிஷ்டை செய்து முற்றிலும் மாறுபட்ட முறையில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது வேலூர், கோட்டை ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் ஆகும்.

வேலூர்க் கோட்டையும், கோவிலும் 1566ஆம் ஆண்டு சிற்றரசர் சின்னபொம்மி நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்டது. பிறகு அரசியல் காரணங்களால் பலவித மாற்றங்கள் ஏற்பட்டு ஆற்காடு நவாப்பின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் பிஜப்பூர் சுல்தான் கைக்கு மாறியது. பிறகு மராட்டியர்கள் கைக்கு வந்து ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1806ல் நடந்த வேலூர்க் கலகத்தின் போது திப்பு சுல்தானின் பிள்ளைகளை இங்குச் சிறை வைத்தனர்.

தொடக்கத்தில் 'ஸ்ரீ ஜ்வரகரேஸ்வரர்' என்றிருந்த பெயர் பிறகு காலப் போக்கில் 'ஜலகண்டேஸ்வரர்' என்று மாறியதாகத் தெரிகிறது. மொகலாயர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்தபொழு தும் பிறகு கர்நாடக நவாப்புகளின் ஆட்சியின் போதும் தெய்வ வழி பாடு தடைப்பட்டதால் வேலூர் மக்கள் அருகே உள்ள சத்துவாச்சாரி யில் பாதுகாப்பாக ஸ்ரீ ஜலகண்டேஸ்வரரை பிரதிஷ்டை செய்தனர். அதன் காரணமாகச் சுமார் நானூறு ஆண்டுகள் சுவாமி இல்லாத கோவி லாக இருந்து 1981ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் தேதி வேலூர் நகர மக்கள் முன்னின்று ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனத்தின் சீரிய முயற்சியால் திரும்பவும் பிரதிஷ்டை செய்து திருப்பதி, சுவாமிமலை ஆகிய இடங்களிலிருந்து பஞ்சலோக விக்ரகங்களை வரவழைத்து 8—7—82 அன்று முறைப்படி மகா கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

வேலூர்க் கோட்டை ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவில் சிற்பக் கலையின் ஈடு இணையற்ற அற்புதமானதொரு சிகரம் என்பதில் ஐயமில்லை. கற்றூண்களில் சிற்ப வேலைப்பாடுகளும், நெடி துயர்ந்த கோபுரங்களும், கவினுறு கல்யாண மண்டபமும் நீண்ட உள், வெளிப் பிரகாரங்களும் சிற்பக் கலையின் மேம்பாட்டை உணர்த்துகின்றன.

பெரும்பாலான கோவில்களில் நவக்கிரகங்கள் ஒரே பீடத் தில்தான் இருக்கும். ஒவ்வொரு கிரகத்தையும் தனித் தனியே சந்நிதியில் கொண்டு நவக்கிரகங்களுக்கென்று ஒரு தனிக் கோவில் உள்ளது. அதுதான் கும்பகோணம் அருகே உள்ள 'சூரியனார் கோவில்'. இங்கு மூலஸ்தானத்தில் இருப்பவர் சூரிய பகவான்.

— வி. ஆர். சின்ன அருணாசலம், தேவகோட்டை.

நானூறு ஆண்டுகள் வழிபாடு இல்லாத காரணத்தால் இக்கோவில் தொல் பொருள் இலாகாவின் கண்காணிப்பில் இருந்து வந்தது. அவர்கள் நித்ய வழிபாடு நடைபெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதைத் தடை செய்து, விக்ரகங்களை அகற்ற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள். வேலூர் பக்தர்கள் தெய்வ வழிபாடு நடைபெற்று வருவது முறையானதுதான் என்று வாதாடினர். தொல் பொருள் துறையினர் கோவிலில் பிரதிஷ்டை செய்த சிலையை அகற்றும்படிக் கோரியபோது, ஜில்லா அதிகாரிகள் மக்களின் ஒன்று பட்ட தெய்வீக எழுச்சியை உணர்ந்து சிலையை அகற்றினால் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படுமென்று மறுத்து விட்டனர். அதன் பிறகு அம்மன் சிலையும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. வேலூர் பக்தர்கள் மாவட்ட நீதி மன்றத்தில் கோவிலில் வழிபாடு நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்று கோரி, வாதாடும் வழக்கு ஒன்று இன்னும் நடைபெற்று வருகிறது. தொல் பொருள் இலாகாவினர் இந்த வழக்கை சென்னை உயர் நீதி மன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று கோரியதை மேற்படி மன்றம் தள்ளுபடி செய்து மாவட்ட நீதி மன்றத்திலேயே விரைவில் முடிவு செய்யுமாறு தீர்ப்புக் கூறியுள்ளது. இது இன்னும் முடிவாகாமல் இருந்து வருகிறது. இதற்கிடையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியின் முன்னிலையில் ஸ்ரீ மயிலை குருஜி ஸ்வாமிகள், திருவலம் ஸ்ரீ மௌன ஸ்வாமிகள் ஆகியோரின் அமோக ஆதரவுடன் இலட்சக் கணக்கான மக்களிள் பக்திப் பெருக்கோடு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றிருக்கிறது. காணக் கிடைக்காத, செயற்கரிய செயலான இக் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்திய ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தர்ம ஸ்தாபனத்தினர் இந்த மகத்தான கும்பாபிஷேகப் பணியில், தெய்வ வழிபாட்டில் சிறந்து விளங்கும் நகரத்தார் பங்கு கொள்ள வேண்டும் என்று என்னிடம் கேட்ட பொழுது மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு இயன்ற அளவு நிதி திரட்டித் தருவதாகத் தெரிவித்தேன். அதன் பிறகு கொப்பனபட்டி மு. ப. மு. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களுடைய ஒத்துழைப்பின் பேரில் உடனே நகரத்தார் சங்கம் அமைத்தோம். பத்துப்பேர்கள் கொண்ட கும்பாபிஷேகக் கமிட்டியும், ஐந்து பேர்கள் கொண்ட கல்யாண உற்சவக் கமிட்டியும் ஏற்படுத்தி சிறந்த முறையில் கும்பாபிஷேகத்தில் நகரத்தார் சார்பில் பங்கு கொண்டோம். அன்று இரவு ஏழு மணி அளவில் மேளதாளத்துடன் நம் பெண்கள் ஆர்வமுடன் சீர் வரிசைகள் எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று ரூ. 7,500 செலவில் நகரத்தார் சார்பில் முதல் கல்யாண உற்சவத்தை வெகு விமரிசையாக நடத்தியது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடியதாகும்.

நானூறு ஆண்டுகள் வழிபாடு இல்லாமல், தெய்வம் இல்லாத கோவில் என்று பெயர் கொண்டிருந்தது இன்று தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வேதங்கள் ஒலிக்க அபிஷேக ஆராதனைகளுடன் நான்கு காலப் பூஜைகள் ஜாம் ஜாமென்று நடைபெறுவதைப் பார்க்கும் பொழுது பக்திப் பரவசத்தால் மெய்சிலிர்க்கிறோம். இந்த அற்புதக் கோயிலையும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மிகப் பெரிய விநாயகர், நடராஜர், சரித்திரப் பிரசித்தி பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகையிலும் சிறப்புக் கொண்ட ஸ்ரீ ஜலகண்டேஸ்வரரைத் தெரிசித்துத் திருவருளைப் பெற்று எல்லா நலன்களையும் அடையுமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.



பி. அழகாபுரி - கீழச்சிவல்பட்டி நகர இளைஞர் குழு

நகர இளைஞர் குழுவின் 6-ஆம் ஆண்டு விழா கடந்த 4-7-82 அன்று கீரணிப்பட்டியில் மு, அள. மடத்தில் சிறப்புடன் நடைபெற்றது. நம்மவர்களில் வசதிக் குறைவானவர்களின் கல்விப் பணிக்கு உதவும் சீரிய நோக்கோடு செயல்படும் இக்குழு, இவ் வட்டாரத்தில் நம்மவர்களின் வைபவங்களில் பந்தி பரிமாறுவதிலும், கோவில் திருவிழா நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய ஒத்துழைப்புகளையும் செய்து வருகிறது.

இக்குழுவின் நடப்பு ஆண்டுத் தலைவராக திரு. மு. சாத்தப்பனும், செயலாளராக திரு, அழ. முத்தப்பனும், இணைச் செயலாளராக திரு. கி. வைரவனும் பொருளாளராக திரு. பழ. சொக்கலிங்கமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்ற ஆண்டுத் தலைவரான திரு. வெ. சுப. பழனியப்பன் நன்றி கூறினர்.

இக் கூட்டத்திற்கு புலவர் திரு. சோம. சிவப்பிரகாசம், கவிஞர் திரு.சிவல்புரி சிங்காரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சிவகாசி நகரத்தார் வணிகர் சங்கம்

சிவகாசி நகரத்தார் வணிகர் சங்கத்தின் உறுப்பினர்கள் கூட்டம் 1–8–82 அன்று மு. குமரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழ்ப் பேரறிஞர் 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்களது மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்கள்.

மேற்படி சங்கத்திற்கு நிதி திரட்டி, சொந்தமாக நிரந்தரக் கட்டிடம் ஒன்று கட்டவும், சமூகத்தில் வசதிக் குறைவானவர்களுக்கு கல்வி வசதிக்கு உதவி செய்வதென்றும், திருமணங்களுக்குப் பண உதவி செய்வதென்றும், தையல் மிஷின்கள் வாங்கி, பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதென்றும், மேலும் பல வகைகளிலும் சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணையாய்ச் செயல்படுவதென்றும், தீர்மானித்து இச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

ஈரோடு நகரத்தார் சங்கம்

ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் பற்றி அதன் செயலாளர் திரு. என். இராமநாதன் அறிவிப்பதாவது :

ஈரோடு சங்கம் 7—5—67ல் துவங்கப் பெற்றுச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. 28—12—80 முதல் 9, மண்டபம் சாலை, ஈரோடு என்ற முகவரியில் உள்ள சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. ஆண்டு தோறும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்விக்காகச் சிறிய தொகை நன்கொடையாக வழங்கி வருகிறோம். மாதந் தோறும் முதல் ஞாயிறன்று கூட்டு வழிபாட்டுக் கூட்டம், பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. ஆண்டு தோறும் பிள்ளையார் நோன்புக்கு இழை எடுத்துக் கொடுத்து வருகிறோம். வெளியூர்களிலிருந்து வரும் நம்மவர்கள் இங்கு தங்குவதற்கு வசதி செய்து தர ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம் — இவ்வாறு திரு. என். இராமநாதன் அறிவித்திருக்கிறார்.

கம்பன் அறநிலைக்கு ஜி. கே. சுந்தரம் புதிய தலைவர்!

'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்கள் மறைவுக்குப் பின் 30—7—82 அன்று கம்பன் அறநிலையின் அறங்காவலர் குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜி. கே. சுந்தரம் அவர்கள் தலைவராகவும் மு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்கள் நிர்வாக அறங்காவலராகவும் ஏஎல். திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் மற்றும் திருவாளர்கள் கா. கு. கோதண்டராமக் கவுண்டர், எம்.எஸ்.சுந்தரம் பிள்ளை, ஆர்எம்.கண்ணப்பன், என்.ஏ. மாரிமுத்துப் பிள்ளை, அ. சொ. அண்ணாமலைச் செட்டியார், எம். எஸ். எம். எம். சொக்கலிங்கம் செட்டியார், என். கோவிந்தசாமி, கம்ப ராமன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

சா. கணேசன் பிரிவுக்கு அனுதாபம்

பெருமதிப்பிற்குரிய 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்களின் பிரிவு குறித்து வருந்துகிறோம். அவர்களின் பிரிவால் வருந்தும் அவர்களின் குடும்பத்தாருக்கும், கம்பன் கழக நிர்வாக சபையினருக்கும், எங்கள் திருக்கூட்டத்தினர் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு சா. கணேசன் அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவன் திருவருளை நினைந்து சிந்திக்கின்றோம். சா. கணேசன் அவர்கள் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் தெய்வீகப் பணிகளுக்கும் செய்துள்ள சேவைகளையும் தாய்நாட்டின் விடுதலைக்காக செய்துள்ள தியாகங்களையும் என்றென்றும் மறக்க முடியாது என கண்டவராயன்பட்டி அருள் நெறித் திருக் கூட்டச் செயலாளர் நா.அருணாசலன் செட்டியார் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

வைஸ்யா வங்கித் தலைவருக்கு வரவேற்பு, விருந்து.

வைஸ்யா வங்கித் தலைவர் திரு. டி. கே. கே. பகவத்தும் அவரது துணைவியாரும் அண்மையில் மதுரைக்கு வந்திருந்தபோது மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் சிறப்பானதொரு வரவேற்பளிக்கப் பட்டது. அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், அவர்களை வரவேற்றார்.

திரு. பகவத் தம்பதியோடு வைஸ்யா வங்கி அதிகாரிகள் திரு. ராம் மோகன் ராவ், திரு. சத்தியநாராயணன், திரு. சுப்பிரமணியன், மதுரைக் கிளை மானேஜர் திரு. ஏ எல். சுப்பையா ஆகியோரும் வந்திருந்தனர்.

திரு. ஏ ஆர். வெங்கட்ராமன், திரு. எம் ஆர். இராமநாதன், திரு. எம். சி என். மாணிக்கம். திரு. பி. தேவேந்திர குமார் குப்தா, திரு. எம். எஸ். குமரகுருபரன் மற்றும் நண்பர்கள், நிறுவனங்கள் இணைந்து வைஸ்யா வங்கித் தலைவருக்கு 15-8-82 அன்று பாண்டியன் ஓட்டலில் ஒரு விருந்து அளித்தனர்.

திரு. எம். சி என். மாணிக்கம் சார்பாக பாண்டியன் ஓட்டல் நிர்வாக இயக்குநர் திரு. பி. சி. எம். சுந்தரபாண்டியன் சிறப்பு விருந்தினருக்கு மீனாட்சி அம்மன் சிலை ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

உங்களுக்குத் தெரியுமா?

- உலகிலேயே ஆழமான கடல்:
  பிலிப்பைன்ஸ் அருகில் உள்ள பசிபிக் கடல் பகுதி.
  ஆழம் - 7 மைல்கள்.
- உலகிலேயே சக்தி வாய்ந்த ஒளியுடைய கலங்கரை விளக்கம்:
  பிரான்ஸில் பிரிட்டானிக் கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கம். உயரம் - 163 அடிகள்.
- உலகிலேயே மிக உயரமான குடியிருப்புக் கட்டிடம்:
  சிகாகோ நகரில் இருக்கிறது. இது 110 மாடிகளை உடையது. உயரம் - 1452 அடிகள். வசிப்போர்-16700 பேர்கள்.
- உலகிலேயே மிகச் சிறிய பத்திரிகை:
  'பத்ரானு'. உயரம் மூன்றரை அங்குலம். அகலம் இரண்டரை அங்குலம். வெளியிடும் மாநிலம்-மேற்கு வங்காளம்.
- உலகிலேயே பெரிய வைரம்:
  பிரிட்டிஷ் அரசியின் செங்கோலில் பதித்திருக்கும் 'ஆப்பிரிக்க ஸ்டார்' என்ற வைரம் தான்.

— கார்த்திகைமடம் தே. சுப்பிரமணியன், வேந்தன்பட்டி.

கோவில்களில் தமிழில் வழிபாடு:

பழ. கருப்பையாவின் முயற்சிக்கு வெற்றி

மதுரை அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தருகிறவர்களின் விருப்பத்திற்கிணங்க அர்ச்சனைச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதாகவும் 1—7—82 முதல் 31—7—82 முடிய அதாவது ஒரு மாதத்தில் தமிழில் அர்ச்சனை செய்வதற்கான சீட்டுகள் 41,512ம் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்வதற்கான சீட்டுகள் 236ம் விற்கப்பட்டிருப்பதாகவும் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பத்திரிகைச் செய்திக் குறிப்பில் அறிவித்திருக்கிருர்கள்.

இத் திருக்கோவிலில் பூசை செய்து வரும் சிவாச்சாரியார்கள் அனைவரும் தமிழ் அர்ச்சனை செய்வதில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிருர்கள்.

மதுரை காந்தியத் தொண்டர் மன்றத்தின் சார்பில் தமிழ் அர்ச்சனை மாநாடு நடத்திய அதன் தலைவர் பழ. கருப்பையா அவர்களின் முயற்சிக்கு இது வெற்றியாகும்.

மீனுட்சி அம்மன் கோவிலுக்குச் சைக்கிள் அன்பளிப்பு

மதுரை, நாகப்பா சைக்கிள் மார்ட் நிறுவனத்தார் மதுரை அருள் மிகு மீனுட்சி அம்மன் திருக்கோவிலுக்குச் சைக்கிள் ஒன்றை அன்பளிப் பாக வழங்கினர்கள். மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவரான ஆர் எம். முத்தழகப்ப செட்டியாரவர்கள் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் முன்னிலை யில் இதை வழங்கினர்கள்.

திருத்தம்

சென்ற இதழில் வெளியான 'காலமானுர்' என்று தலைப்பிட்ட செய்தியில் 'குருவிக்கொண்டான்பட்டி அ. சொ. சித சிதம்பரம் செட்டியார் அவர்களின் மனைவியும் சித. வடிவேல் செட்டியார் அவர் களின் தாயாருமான' என்றிருப்பதை 'சித. அழகு செட்டியார், சித. வடிவேல் செட்டியார் ஆகியோரின் தாயாருமான' என்று திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேம்.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

Regd. No. TN MA(C) 106 Nagarathar Kural